


**கொரோனா தொற்றுநோய் : இந்த நெருக்கடியின் போது ஆடைத் தொழிலில் என்ன செய்ய முடியும்?**

கொரோனா வைரஸ் தொற்று நோயை நவீன வரலாற்றில் மனித குலம் அனுபவித்த மிக மோசமான சர்வதேச அவசர நிலை என்று அழைக்கலாம், ஏனெனில் இது உலகளாவிய பரவல் மற்றும் கொடூரமான வேகத்தில் மக்களைப் பிடிக்கும் திறன் கொண்டது. இது முழு உலகத்திற்கும் பேரழிவை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

வெவ்வேறு நாடுகளில்-வெவ்வேறு மட்டங்களில் இந்த வைரஸ் பரவிவருகிறது, சிங்கப்பூர் போன்ற சில நாடுகள் விதிவிலக்காக இருக்கும் போதும், இந்த வைரஸின் தாக்கம் இருந்தால் எந்த நாடும் காப்பாற்றபடாது.

இந்த மனிதாபிமான நெருக்கடியின் பொருளாதார தாக்கம் மிகவும் ஆழமாக மனதை பாதிக்கிறது. ஆடைத் தொழில் மிகவும் மோசமாக பாதிக்கப்படும் ஒன்றாக் கூறப்படுகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற முக்கிய நுகர்வு சந்தைகளில் உலகளாவிய பேஷன் ஜாம்பாவான்கள் வீழ்ச்சி அடைவதாக தகவல்கள் வந்துள்ளன. அவர்களில் பலர் துறைமுகங்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள தொழிற்சாலைகளில் காத்திருக்கும் ஆயத்த ஆடைகளின் விநியோகத்தை நிறுத்தி வைத்துள்ளனர், அவற்றில் பெரும்பாலானவை ஆசியாவில் அமைந்துள்ளன.

இது மில்லியன் கணக்கான ஆடைத் தொழிலாளர்கள் மற்றும் அனைத்து விளிம்புகளில் வேலை செய்யும் வணிகங்கள் மீது பேரழிவை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. BGMEA மதிப்பீடுகளின்படி, மார்ச் 25ம் தேதி வரை, 258 கோடி அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஏற்றுமதி ஏற்கனவே ரத்து செய்யப்பட்டுள்ளது அல்லது ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதில் 936 தொழிற்சாலைகள் மற்றும் 1 கோடியே 92 இலட்ச தொழிலாளர்கள் உள்ளனர். இந்தியாவில், திருப்பூரில் உள்ள தொழிற்சாலைகள் மார்ச் 22 முதல் மூடப்பட்டுள்ளன. தொழிற்சாலை உரிமையாளர்கள் தொழிலாளர்களுக்கு முழு சம்பளத்தையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். இந்தியாவில் மீதமுள்ள தொழிற்சாலைகளும் மார்ச் 25 முதல் National Lock Down செய்யப்பட்டுள்ளது. மியான்மரில் உள்ள சில தொழிற்சாலைகள் ஏற்கனவே மூடப்பட்ட நிலையில் உள்ளது, இந்த விசயத்தில் மற்ற நாடுகள் ஒன்றும் விதிவிலக்கல்ல.

நாம் அனைவரும் ஒரே மாதிரியான சூழ்நிலையில்தான் இருக்கின்றோம், எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள் அல்லது கஷ்டப்படுவார்கள் என்பது உண்மைதான். இதில் பிராண்டுகள், சில்லறை விற்பனையாளர்கள், இறக்குமதியாளர்கள் Sourcing நிறுவனங்கள், ஆடை உற்பத்தியாளர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் மற்றும் இதில் மிக முக்கியமாக தொழிலாளர்கள் உள்ளனர்.

இருப்பினும், பேரழிவை சமாளிக்கும் திறன் அனைவருக்கும் ஒரே மாதிரியானது அல்ல என்பதை நாம உணர வேண்டும். நாம் ஒன்றாக வேலை செய்து ஒருவருக்கொருவர் உதவ முடியுமானால், இந்த தொற்றுநோயின் வலியை குறைக்க முடியும். "வலி பகிரும் போது பாதியாக குறைகிறது மற்றும் மகிழ்ச்சி பகிரும் போது பன்மடங்காக அதிகரிக்கிறது".

இந்திய ஜவுளித்துறை அமைச்சர் திருமதி.ஸ்மிருதி இராணி உலகளாவிய ஆடை வாங்குபவர்களுக்கு (Buyer) ஏற்றுமதிகளை ரத்து செய்ய வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். "நம்மால் இரக்கத்துடன் வர்த்தகம் செய்ய முடியும் என்பதை உலகத்திற்கு காண்பிப்போம்" என்று அவர் கூறியுள்ளார்.

BGMEA தலைவர் டாக்டர் ரூபனா ஹீக் Buyer களுக்கு மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளுங்கள் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். பேரழிவு நேரத்தில் பங்களாதேஷ் தொழிற்சாலையை கைவிட வேண்டாம் என்றும், உங்களின் இதயத்தை தொட்டு இரக்கத்துடன் செயல்பட வேண்டிய நேரம் இது என்றும் கூறியுள்ளார். அமைச்சர் ஸ்மிருதி இராணி மற்றும் டாக்டர் ரூபனா ஹீக் இருவரும் International Buyer களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதால், நான் உங்களிடம் - சுகாதார வேலைகளை நிவர்த்தி செய்வதிலும், பணியாளர்களை ஆதரிப்பதிலும் சிறப்பு கவனம் செலுத்தி மேலும் என்ன செய்ய முடியும் என்பதில் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

**மனிதாபிமான அடிப்படையில், பேஷன் துறையால் எடுக்கப்பட்ட பல முயற்சிகளை கீழே விவரிக்கின்றோம்.**

- முக்கிய Retailer களான **H&M, C&A, GAP** போன்ற சில Brand-கள் **PPE (Personal Productive Equipment)** ஐ தயாரிகக் தேவையான மூலப்பொருட்களை வழங்க முன்வந்துள்ளது.

- இலங்கையிலுள்ள **Brandix** மற்றும் இந்தியாவிலுள்ள **IKEA** போன்ற நிறுவனங்கள் அவர்களின் கட்டிடத்தை தனிமைப்படுத்தப்பட்ட மையமாக மாற்றிக் கொள்ள வழங்கினார்கள்.

- **ரிலையன்ஸ்** ஒரு பிரத்யேக கொரோனா வைரஸ் மருத்துவமனையை அமைத்துள்ளது.

- **அனிதா டோங்ரே** போன்ற முன்னணி Designer-கள் Artisans மற்றும் சிறு விற்பனையாளர்களையும் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை செய்துள்ளனர். Inter National Designer-களான **அர்மானி, வெர்சேஸ்** மற்றும் பலர் பாதிக்கப்பட்ட மக்களை ஆதரிப்பதற்கான நிதிகளுக்கு நன்கொடைகளை வழங்கினார்கள்.

- மேலும் பல குறிப்பிடத்தக்க முயற்சிகள் உள்ளன.

இந்த முயற்சிகள் அனைத்தும் பாராட்டப்பட வேண்டும், மேலும் சவால் மிகப்பெரியது என்பதால் உலகளவில் இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனது எண்ணத்தின் அடிப்படையில் ஆடை உற்பத்தி துறையின் உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டியவைகள் இவையே. இது வெவ்வேறு வகையான ஆடை உற்பத்தியாளர்களுக்கென பிரத்யேகமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தந்த நாட்டைப் பொறுத்து இன்றளவிலும் ஆலையை இயக்குபவர்களாக இருக்கலாம் அல்லது அரசின் அனுமதியுடன் இயங்குபவர்களாக இருக்கலாம் அல்லது முன்னெச்சரிக்கைக்காக ஆலையை மூடியவராக இருக்கலாம்.

**இன்னும் வேலை செய்யும் தொழிற்சாலைகள் என்ன செய்ய முடியும் ?**

- **பணியாளர்களுக்கான சமூக தூரத்தைப்** பற்றிய ஆலோசனையை பின்பற்றுங்கள் (உடல் ரீதியான தூரம்).

- தொழிற்சாலைக்கு செல்லும் போது, சமூகம்/வீட்டில் பணிபுரியும் போது எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் குறித்து **தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை மேம்படுத்த, தொழிற்சாலை தொடர்பு சேனல்களை பயன்படுத்தவும்.** இது உங்கள் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த சமூகத்திற்கும் உதவும். **சமிதா செராஜ்** எழுதிய **"டெய்லி ஸ்டார்"** கட்டுரையில் உள்ள தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான ஆரம்ப வழிகாட்டியின் பயனுள்ள கட்டுரை இங்கே.

- **நீங்கள் முகமூடிகள் மற்றும் பாதுகாப்பு ஆடைகளை தயாரிக்க முடியும். WHO**-வின் விவரக்குறிப்பின்படி இவற்றை தயாரிக்க பல Buyer-கள் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். மருத்துவமனைகளுக்கான **AAMI**-ன் வழிகாட்டுதல்கள் பயனுள்ளதாக இருக்கும் அல்லது உங்கள் தேசிய தர நிலைகளை பார்க்கவும். கொரோனா தொற்று நோய்க்கு எதிரான போரில் போராடும் முன்னணி சுகாதார நிபுணர்களை பாதுகாப்பதில் இது ஒரு சிறந்த பங்களிப்பாக இருக்கும்.

- **இந்த நேரத்தை பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சிகளை அளிக்க பயன்படுத்துங்கள் :** பொருள் பற்றாக்குறை காரணமாக நீங்கள் அனைத்து லைன்களையும் முழு நேரமாக இயக்க முடியாவிட்டால், தயவு செய்து நீங்கள் இதற்கு முன்னர் செய்ய நேரம் கிடைக்காத பல்வேறு தரப்புகளில் பணியாளர்களை பயிற்றுவிக்க கிடைக்கக் கூடிய இந்த நேரத்தை பயன்படுத்தவும்.

- **Lock Down-க்காக பணியாளர்களை தயார் செய்தல் :** பயிற்சியாளர்கள் /மேலாளர்கள் இந்த Lock Down நேரத்தில் பணியாளர்கள் தங்கள் வாழ்க்கையை எவ்வாறு நடத்துவது, பணியாளர்கள் சொந்த ஊருக்கு/கிராமங்களுக்கு அதிக எண்ணிக்கையில் பயணிப்பது குறித்து வழிகாட்டினால் அவர்கள் பெரும் பயனடைவார்கள்.

- **உங்கள் ஊழியர்களுக்கு ஒரு ஹெல்ப்லைனை உருவாக்கவும்.** இதன் மூலம் அவர்களுக்கு எந்த நேரத்திலும் உதவி செய்ய முடியும். பல நிறுவனங்கள் அதை செய்து முடித்தது. இதற்கு உதாரணமாக இலங்கையைச் சேர்ந்த MAS என்ற நிறுவனத்தை கூறலாம்.






**தற்போது மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் என்ன செய்ய முடியும்.**

- **உங்களிடம் வாட்ஸ் ஆப் குழுக்கள் இல்லையென்றால், அதை உடனடியாக உருவாக்குங்குகள்.** அதன் மூலம் உங்கள் பணியாளர்களுக்கு உடல் நலம் தொடர்பான உண்மையான ஆலோசனையை உள்ளூர் மொழியில் கூறுங்கள். நம்மைச் சுற்றி நிறைய வதந்திகள்/கட்டுக்கதைகள் உள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள். சிறிய குழுக்களை உருவாக்கி அதை வழிநடத்த மற்றும் கண்காணிக்க மேற்பார்வையாளரை நியமிக்கவும்.
- **அரசாங்கத்தின் சுகாதார அதிகாரிகளின் அறிவுரைகளை பின்பற்ற அவர்களை ஊக்குவிக்கவும்.** இல்லாவிட்டால் மக்கள் மனக்கிளர்ச்சியுடன் செயல்பட்டு தங்கள் சொந்த மற்றும் பிறரின் வாழ்க்கையை ஆபத்தில் வைக்கக் கூடும்.

- **உணர்வுப்பூர்வமான ஆதரவை வழங்குங்கள் :** உங்கள் பணியாளர்கள் கடுமையான துயரத்திற்கு ஆளாக நேரிடும், மேலும் சூழ்நிலையை உணர்வுப்பூர்வமாக கையாள

முடியாமல் போகலாம். உங்கள் HR team மூலம் பணியாளர்கள் தங்களை எவ்வாறு நிர்வகிப்பது என்பதில் உணர்ச்சிப்பூர்வமான ஆதரவை பெற முடியும்.

- **உதவி லைன்களை (Help lines) செயலில் வைத்திருங்கள்,** இதனால் துன்பத்தில் உள்ள மக்கள் உங்களிடம் நல்ல ஆலோசனைகளை பெற முடியும். மன உறுதியை உயர்த்துவதற்கான எடுத்துக்காட்டுகள் மற்றும் நேர்மறை கதைகளைப் கூறுங்கள்.

- **நிதி அழுத்தத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பதற்கான வழிகாட்டி?** கடுமையான நிதி மன அழுத்தம் அவர்களிடம் இருக்கும். செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய குறிப்புகளை எளிய முறையில் பகிரவும், இதனால் பணியாளர்கள் நிதி நெருக்கடிப் பற்றிய எதிர்மறை எண்ணங்களிலிருந்து விடுபட்டு வரமுடியும்.

- உங்கள் பணியாளர்களுக்கு தேவையான Soft Skill சார்ந்த பயிற்சிகளை Zoom/Google, Hangout, Skype போன்ற **இணையதள சேவைகள் மூலம் பயிற்சியை தொடங்கலாம்.** தாங்கள் இந்த பயன்பாடுகளை நீண்ட காலமாக பயன்படுத்தி வருகிறோம்.

இந்த எண்ணங்களில் சில உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். தொழிற்துறைக்கு மேலும் எவ்வாறு பங்களிக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பது குறித்த உங்களுடைய கருத்துக்களை கேட்க நான் ஆவலாக உள்ளேன்.

**ஒன்று மட்டும் நிச்சயம், நாம் உறுதியுடன் கைகோர்த்தால், இந்த நெருக்கடியான இந்த நேரத்தில் நாம் நிறைய துன்பங்களைக் குறைத்து, சில முகங்களில் புன்னகையைக் கொண்டு வரமுடியும். இந்த நெருக்கடியால் மிகவும் பாதிக்கக்கூடிய நம்முடைய Supply Chains மற்றும் மிகவும் மதிப்புமிக்க ஆடை தொழிலாளர்களை ஆதரிக்க ஒன்றிணைந்து செயல்படுவோம்.**

**எழுத்தாளர் பற்றி :**

ராஜேஷ் பேடா கன்சல்டிங் (Rajesh Bheda Consulting) நிர்வாக இயக்குனர் டாக்டர் ராஜேஷ் பேடா, ஆடைத்துறையில் முப்பது வருடங்களுக்கு மேலாக பங்களிப்பு செய்த ஒரு முன்னணி ஆலோசகர், ஆராய்ச்சியாளர் மற்றும் கல்வியாளர் ஆவார்.

“MANAGING PRODUCTIVITY IN APPAREL INDUSTRY” என்ற புத்தகத்தின் மூலமும், ‘Win-Win’ என்ற செயல்திறன் மேம்பாட்டிற்கான Supply chain ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் அவர் எழுதிய புத்தகத்தின் மூலம் அவரைப் பற்றி மேலும் அறியலாம். இவர் சர்வதேச வர்த்தக மையம் ஜெனிவா, சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), EBRD, CBI-Netherlands, ஆசிய உற்பத்தித் திறன் அமைப்பு - ஜப்பான் மற்றும் பல அரசாங்கங்களின் ஆலோசகராக உள்ளார்.

இவரது அமைப்பான - ராஜேஷ் பேடா கன்சல்டிங் சர்வதேச பிராண்டுகள், ஆடை உற்பத்தியாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களின் நம்பகமான கன்சல்டிங் நிறுவனமாக உருவெடுத்துள்ளது. RBC-ஐ அமைப்பதற்கு முன்பு National Institute of Fashion Technology-ல் Fashion Technology துறையின் பேராசிரியராகவும், தலைவராகவும் இருந்தார். அவரை Drbheda@rajeshbheda.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் அணுகலாம்.

https://youtu.be/DKnShHXO7WM

https://youtu.be/LmhbW9DO4os